**DEPOSITION OF WITNESS**
**In the court of Sub Court, Eraniel**
**S.C.No. 233/23**
**Prosecution Witness – PW 12**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. ஜெமினிஸ் |
| Father's Name | : | |
| Age | : | |
| Calling | : | |
| Village | : | |
| Taluk | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 02.12.2025.

A3, A4, A6, A8 and A9 are present. for A1, A2, A5,and A7 absent. 355 BNSS petition filed and allowed.

முதல் விசாரணை–

நான் ஆரோக்கியபுரத்தில் குடிவசிக்கிறேன். நான் சொந்தமாக ஸ்டுடியோ வைத்திருக்கிறேன். வழக்கு சம்பந்தமாக எனக்கு விபரங்கள் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சியில் உள்ள கையொப்பம் என்னுடையதல்ல. சாட்சி திதியோனை எனக்கு தெரியும் அவர்என்னுடைய நண்பர்.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது)

கடந்த 09.07.2022 மாலை 6 மணிக்கு நானும், அழகன்பாறை அஞ்சல் பீட்டர் செல்வன் மகன் திதியோன் என்பவரும் தெற்கு புதுவிளையில் இருந்து திங்கள் நகர் நோக்கி தெற்கு புதுவிளை ஸ்ரீமல்லன் கருங்காலி திருக்கோயில் அருகில் நின்றுகொண்டிருந்தபோது அங்கு வந்த இரணியல் உதவி ஆய்வாளர் இரணியல் காவல் நிலைய குற்ற எண்.348/2022 வழக்கு சம்பந்தமாக வழக்கின் சம்பவ இடம் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளையும் பார்வையிட்டு தயார் செய்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில், நானும் என் நண்பர் திதியோரும் கையொப்பம் இட்டுவிட்டு, தொடர்ந்து மாலை 6.45 மணிக்கு சம்பவ

**இடத்தில் காணப்பட்ட உடைந்த கண்ணாடி துண்டுகளை கைபற்றி தயார் செய்த அத்தாட்சியில் நானும் எனது நண்பரும் கையொப்பம் இட்டோம் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகளுடன் சுமூகமானநிலையல் இருப்பதினால் அவர்களுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**